


08.12.2025

## 49. கல்வாரி பாடுகள், திகிலடைய அல்ல, அர்ப்பணமே மலரட்டும்!

**சி**லுவை அன்பின் நாதனே.....

கல் நெஞ்சங்கள் உமக்களித்த

கல்வாரி கொடுமையால், திகலடைந்து

“கடுமை வாழ்வு வேண்டாம்!”

என மறுக்கும் எண்ணம், எனக்கு வேண்டாம்!

“உம் பாதையே என் தஞ்சம்!” என, சிலுவைநாதரின்

அந்த வீர பாதையில் தீவிரமாய் என்னை நடத்தும்!

அவரது பாதையில், அன்பும்....

அச்சமில்லா விசுவாசமும் பெற்றிடுவேன்!

ஓ என் அன்பு தேவா......

என் நம்பிக்கை தளர்ச்சி ஒழியட்டும்,

உம் வாஞ்சையை அழித்திடும் குளிர் அவியட்டும்!

என் தெய்வமே, அக்கினிச் சுடரே, உமக்கே நான் இரையாகட்டும்!

என்னை முற்றிலும் எரித்து, உமக்கே சாம்பலாக்கும்! ஆமென்.

- ரத்னம்